நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பட்டுக்கோட்டை.
முன்னிலை திருமதி வி.பிரியா, , எம்.,எல்.,
நீதித்துறை நடுவர், பட்டுக்கோட்டை.
2018ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 28-ஆம் நாள் வியாழக்கிழமை.
2047 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிளம்பி வருடம் ஆனி மாதம் 14—ம் நாள்
ஜீவனாம்ச வழக்கு எண் 1/17

கலாதேவி,
க/பெ.தண்டாயுதபாணி ... மனுதாரர்

/எதிர்/

தண்டாயுதபாணி,
த/பெ.கருப்பையா ... எதிர்மனுதாரர்

இவ்வழக்கானது 14.2.17ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.எம்.சாமித்துரை அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி எஸ்.ஜே.சுபாஷினி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டு, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந் வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது வாழ்க்கைப் பொருளுதவித்தொகையாக மனுதாரருக்கு உணவு செலவிற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6000/—மும், உடைகள்மற்றும் மருத்துவ செலவிற்கு மாம் ஒன்றுக்கு ரூ.24,000/—மும் மொத்தம் மாதம் ரூ.30,000/— எதிர்மனுதாரர் அளிக்க வேண்டுமென உத்தரவிடக்கோரி குவிமுச 125 பிரிவின்கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம்</u>

1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 1992ம் வருடம் அன்று பெரியோர்கள் முன்னிலையில் கருங்குளம் கிராமத்தில் முறைப்படி திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின்போது 20 பவுன் நகை, எதிர்மனுதாரருக்கு மோதிரம், கழுத்து செயின் ஆக 5பவுன் போட்டும் சீர்வரிசை சாமான்கள் கட்டில், பீரோ, மோட்டார்பைக் வாங்க ரூபாய் 20,000/— கொடுத்ததாகவும், இருவரும் குடும்பம் நடத்தியதில் 2 பெண் குழந்தையும், 1 ஆண் குழந்தையும் பிறந்ததாகவும், நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்த எதிர்மனுதாரர் அதிராம்பட்டிணத்தை சேர்ந்த பெண்ணை மனுதாரருக்குத் தெரியாமல் கல்யாணம் செய்ததால் மனுதாரர் விபரம் தெரிந்து எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுத்ததால் மனுதாரரை நிராகரித்து வாழவிடாமல் செய்துவிட்டதாகவும், மனுதாரர், எதிர்மனுதாரரின் இம்சை தாங்காமல் தனக்கு வேண்டிய குடும்பத்தைச்

சேர்ந்தவர்கள் இருக்கும் இடமான தற்போது வசித்து வரும் வீட்டில் குழந்தைகளுடன் இருந்து கொண்டு கூலிவேலை செய்து கஷ்ட ஜீவனம் செய்து, குழந்தைகளையும் காப்பாற்றி வருவதாகவும், தற்போது மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் கூலி வேலைக்கு செல்ல முடியவில்லை என்றும், அதனால் தன்னையும், குழந்தைகளையும் பராமரிக்க முடியாமல் கஷ்டப்படுவதாகவும், எதிர்மனுதாரர் சொந்தமாக மனைக்கட்டு வாங்கி அதில் மாடிவீடு கட்டி வாழ்வதாகவும், வெளிநாட்டிற்கு ஆள் எடுத்து அனுப்பும் வேலை செய்து மாதம் லட்ச கணக்கில் சம்பாதித்து ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும், மனுதாரர் 19.1.17 அன்று வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பி மாதம் ரூ.30,000/— வாழ்க்கை பொருளுதவியாக கேட்டபோது எதிர்மனுதாரர் தப்பான சங்கதிகளைக் கண்டு பதில் அனுப்பியதாகவும், எனவே மனுதாரருக்கு உணவு செலவிற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6000/—மும், உடைகள்மற்றும் மருத்துவ செலவிற்கு மாம் ஒன்றுக்கு ரூ.24,000/— மும் மொத்தம் மாதம் ரூ.30,000/— எதிர்மனுதாரர் அளிக்க உத்தரவிட வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் வருமாறு

மனுதாரரின் மனு சட்டப்படியும், பொருண்மைகளின் படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இருவருக்கும் திருமணமாகி 2 பெண்குழந்தைகள் பிறந்தது மட்டும் உண்மை என்றும், 20 பவுன் நகை, மற்றும் 5 பவுன் நகை, பணம் சீர்வரிசை கொடுத்ததாகக் கூறுவது பொய் என்றும், எதிர்மனுதாரர் திருமணமாகி விடுப்பு முடிந்து வெிநாடு சென்றபோது மனுதாரர் தனக்கு உடல் நிலை சரியில்லை என்றும் கழுத்து பகுதியில் கட்டி உள்ளதாகவும், உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் கடிதம் எழுதியதன் பேரில் தான் இந்தியா வந்ததாவும், அதன்பிறகுதான் அனைத்தும் பொய் என்று தெரிய வந்ததாகவும், விடுப்பு முடிந்து வெளிநாட்டிற்கு செல்ல முயன்றபோது போக வேண்டாம், உள்ளூரிலேயே வேலைக்கு போகச் சொன்னதால் தனக்கு தெரிந்த டெய்லர் தொழிலை செய்து வந்ததாகவும், பின்னர் வெளிநாடு போகச் சொன்னதால் மலேசியா சென்றதாகவும், பின்னர் மனுதாரரையும், குழந்தையையும் அழைத்துச் சென்றதாகவும், அங்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்ததாகவும், பின்னர் சக்தி என்பவர் அடிக்கடி வீட்டிற்கு வந்ததாகவும், எதிர்மனுதாரர் வேலைக்கு சென்றபிறகு வந்ததாகவும், அக்கம்பக்கத்தினர் மூலம் விஷயம் தெரிய வந்து மனுதாரரை கண்டித்ததாகவும், மனுதாரர் அப்போது மூன்றாவது முறையாக கருவுற்றிருந்ததாகவும்,

அதை கருகலைப்பு செய்ததாகவும், மனுதாரரோடு ஓவர் ஸ்டேயில் தங்கியிருந்ததால் உடனடியாக மனுதாரரை இந்தியாவிற்கு அனுப்ப இயலவில்லை என்றும், அப்போது மனுதாரர் நான்காவது முறையாக கருவுற்று ஆண் குழந்தை பிறந்து 8 மணிநேரத்தில் மருத்துவமனையிலேயே இருவரும் கைது செய்யப்பட்டு, 50 நாட்கள் சிறையில் இருந்து பிறகு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டதாகவும், பின்னர் எதிர்மனுதாரர் சென்னை சென்று டெய்லர் தொழில் செய்து பணம் அனுப்பியுள்ளதாகவும், அந்த காலகட்டத்தில் மேற்படி சக்தி எதிர்மனுதாரரின் சொந்த ஊருக்கே அடிக்கடி ன்றெு மனுதாரரோடு பழகி வந்துள்ளதாகவும், அதை எதிர்மனுதாரரின் தந்தை கண்டித்ததாகவும், அதனால் மனுதாரர் எதிர்மனுதாரரின் வீட்டைவிட்டு மாளியக்காடு கிராமத்தில் சென்றுவித்து அங்கயேும் அவரது நடவடிக்கை சரியில்லாததால் ஊர்காரர்கள் கண்டித்ததால் பட்டுக்கோட்டையில் குடியேறி கஸ்தூரி மெஸ் என்று பெயரில் உணவகம் நடத்தி வருவதாகவும், மனுதாரர் பிரிந்து சென்று 16 வருடங்கள் ஆகிவிட்டதாகவும், எதிர்மனுதாரர் அவரது குலதெய்வக்கோவிலில் பூசாரியாக இருந்து ஆன்மீக பணி செய்து அதில் கிடைக்கும் வருமானத்தை கொண்டு ஜீவனம் செய்து வருவதாகவும், வேறு வருமானம் கிடையாது என்றும், மன ரீதியாகவும், உறவு ரீதியாகவும் 16 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்துவரும் நிலையில் எதிர்மனுதாரர்கள்மேல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் தூண்டுதலின்பேரில் மனுதாரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், 16 ஆண்டு காலமாக வேறு ஒருவருடன் வாழ்ந்துவரும் நிலையில் வாழ்க்கை பொருளுதவி கோர சட்டப்படி தடைப்பட்டுள்ளதாகவும் எனவே மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

4) மனுதாரர் தரப்பில் மனுதாரர் மசா1 ஆக விசாரிக்கப்பட்டு மசாஆ1 முதல் 4 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) இம்மனுவில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில்,

மனுதாரர் தாக்கல் செய்த இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? மனுதாரர்கள் வாழ்க்கைப் பொருளுதவி பெற அருகதையுடையவரா? அவ்வாறெனில் எவ்வளவு? என்பதேயாகும்.

6) மனுதாரரே ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் மனு சங்கதிகளை ஒத்துரைத்து எதிர்மனுதாரர் கொடுமைப்படுத்தியது குறித்தும், தன்னையும், தனது குழந்தைகளையும் பராமரிக்காமை குறித்தும், சாட்சியமளித்து,

திருமண அழைப்பிதழ் மசாஆ1 ஆகவும், வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மசாஆ3 ஆகவும், எதிர்மனுதாரரின் பதில் அறிவிப்பு மசாஆ3 ஆகவும், பஞ்சாயத்தில் எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த முச்சலிக்கா மசாஆ4 ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

7) எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் எமசா1 ஆகவும், கருப்பையன் என்பவர் மசா2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். எமசா1 தனது எதிருரை சங்கதிகளை ஒத்துரைத்து நிரூபண வாக்குமூலம் அளித்துள்ளார். எமசா2 கருப்பையன் தனது நிரூபண வாக்குமூலத்தில் தான் எதிர்மனுதாரரின் தந்தை என்றும், திருமணம் நடந்து, 2 பெண்குழந்தைகள் பிறந்தது பற்றியும், திருமணத்தின்போது போட்ட நகைகளையும், எதிர்மனுதாரர் வெளிநாட்டில் வேலை செய்தபோது மனுதாரருக்கு வாங்கிக்கொடுத்த 35 பவுன் நகைகளையும் மனுதாரர் வீட்டைவிட்டு செல்லும்போது எடுத்துச்சென்றுவிட்டதாகவும், சிறிது காலத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் வேலை பார்த்து வந்த வெளிநாட்டிற்கு மனுதாரரையும், அவரது குழந்தையையும் அழைத்துச் சென்றதாவும், அங்கு சக்தி என்பவர் அடிக்கடி வந்துள்ளதாகவும், பின்னர் மனுதாரரும், எதிர்மனுதாரரும் இந்தியா வந்து, சென்னையில் டெய்லர் தொழில் செய்துவந்து பணம் அனுப்பியதாகவும், அந்த காலகட்டத்தில் சக்தி சொந்தஊருக்கே வந்து மனுதாரரோடு பழகி வந்ததாகவும், தான் மனுதாரரின் தவறான போக்கை கண்டித்ததாகவும், உடனே மனுதாரர் தங்கள் வீட்டைவிட்டு மாளியக்காடு சென்று வசித்ததாகவும், அங்கும் அவரது நடவடிக்கை சரியில்லாததால் ஊர்மக்கள் கண்டித்ததால் பட்டுக்கோட்டை காளியம்மன் கோவில் தெருவில் வசிப்பதாகவும், 16 வருடம் தன் விருப்பத்திற்கு தனியாக வாழ்ந்துவிட்டு தற்போது எதிர்மனுதாரரிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

8) முதலாவதாக மசாஆ1 திருமண பத்திரிகையை பரிசீலிக்கையில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் மனுவில் குறிப்பிட்டுள்ள தேதியில் திருமணம் நடைபெற்றுள்ளது என்பதும், இருவருக்கும் 3 குழந்தைகள் உள்ளதும் உபயதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பது அறியவருகிறது. மனுதாரர் தனது மனுவின் சங்கதிகளை ஒத்துரைத்து எதிர்மனுதாரர் அதிராம்பட்டிணத்தை சேர்ந்த பெண்ணை மனுதாரருக்குத் தெரியாமல் கல்யாணம் செய்ததால் மனுதாரர் விபரம் தெரிந்து எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுத்ததால் மனுதாரரை நிராகரித்து வாழவிடாமல் செய்துவிட்டதாகவும், மனுதாரர், எதிர்மனுதாரரின் இம்சை தாங்காமல் வேறு வீட்டிற்கு சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சங்கதிகளை எதிர்மனுதாரர் தரப்பிலும் எமசா1, 2 ஆகியோர் தங்கள் குறுக்கு விசாரணையில் எமசா1 வேறு ஒரு பெண்ணை திருமணம்

செய்துகொண்டதை ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும் அவ்வாறு திருமணம் செய்து கொண்டது குறித்து பஞ்சாயத்து பேசி எமசா1-னிடம் முச்சலிக்கா பெறப்பட்டுள்ளது. அது மசாஆ4 ஆக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி முச்சலிக்காவில் மனுதாரருக்கும், குழந்தைகளுக்கும் தேவையானதை செய்து கொடுப்பேன் என்றும் தவறும்பட்சத்தில் மனுதாரர் சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கலாம் என்று உள்ளதாகவும், அதன்படி தான் செய்ய தவறியதால்தான் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் என்றும் எமசா1 தன் குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் மனுதாரர் ஒரு சக்தி என்பவருடன் பேசி, பழகியதாக கூறியுள்ளவற்றிற்கு எந்தவித ஆதாரமோ, சாட்சியமோ தாக்கல் செய்யவில்லை. எமசா1-ன் தந்தையான எமசா2 மட்டுமே அது பற்றி சாட்சியமளித்துள்ளார். வேறு தனி நபர் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் 16 வருடங்களாக எதிர்மனுதாரரைவிட்டு பிரிந்திருப்பதால் அவருக்கு ஜீவனாம்சம் கொடுக்க அவசியமில்லை என்று எதிர்மனுதார் தரப்பில் வாதிடப்பட்டபோதிலும், எதிர்மனுதாரரின் செய்கைகளின் விளைவாகவே மனுதாரர் வீட்டைவிட்டு சென்றதாக தெரிவித்துள்ளது ஏற்புடையதாக உள்ளது

9) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது மசாஆ1 மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளநிலையிலும், எதிர்மனுதாரர் திருமணம் மற்றும் குழந்தைகள் குறித்து எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. எனவே எதிரிமனுதாரர், 1ம் மனுதாரரின் கணவர் என்ற அடிப்படையில் அவரை பாதுகாக்கவேண்டியது எதிர்மனுதாரரின் கடமை என்பதால் எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்சம் பெற மனுதாரர்அருகதை உடையவர் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10) அடுத்ததாக, மனுதாரர் தான் கூலிவேலை செய்து கஷ்ட ஜீவனம் செய்து வந்ததாகவும், தற்போது உடல்நிலை சரியில்லாததால் வேலை செய்ய முடியவில்லை என்றும், எதிர்மனுதாரர் சொந்தமாக மனைக்கட்டு வாங்கி அதில் மாடிவீடு கட்டி வாழ்வதாகவும், வெளிநாட்டிற்கு ஆள் எடுத்து அனுப்பும் வேலை செய்து மாதம் லட்ச கணக்கில் சம்பாதித்து ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கூலிவேலை செய்வதாகக் கூறுவது பொய் என்றும், பட்டுக்கோட்டையில் கஸ்தூரி மெஸ் என்று பெயரில் உணவகம் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக இருதரப்பிலும் எதிர்தரப்பினர் வசதியாக வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளபோதிலும் வருமானத்திற்கு ஆதாரமாக எந்த சான்றாவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

11) எது எவ்வாறு இருப்பினும் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கணவன் என்ற முறையில் ஜீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவர் என்று தீர்மானிக்கப்பட்டமையால், அந்தவகையில் இம்மனு அனுமதிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மாதம் ரூ.1000/- வாழ்க்கைப்பொருளுதவித் தொகையாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து பிரதிமாதம் 5ம் தேதிக்குள் எதிர்மனுதாரர் வழங்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் கருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2018ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 28ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/வி.பிரியா,
நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

<u>மனுதாரர் தரப்புச் சாட்சீ</u>
ம சா 1 திருமதி கலாதேவி

<u>மனுதாரர்கள் தரப்புச் சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| மசாஆ1 | ..... | திருமண பத்திரிகை அசல் |
| மசாஆ2 | 19.1.17 | வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் |
| மசாஆ3 | 1.2.17 | எதிர்மனுதாரரது பதில் அறிவிப்பு |
| மசாஆ3 | .... | எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த முச்சலிக்கா |

<u>எதிர்மனுதார் தரப்பு சாட்சி</u>
எமசா1 திரு.தண்டாயுதபாணி
எமசா2 திரு.கருப்பையன்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u> இல்லை

ஒம்/வி.பிரியா,
நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

/உண்மை நகல்/